## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிகம் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ / மாணவிகளை தலைசிறந்த பள்ளிகளில் சேர்ந்து (Reputed Schools)+1 பயில வாய்ப்பளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல(சிந.2)த் துறை.

**அரசு ஆணை(நிலை) எண். 59** **நாள். 5.7.2007.**

திருவள்ளுவர் ஆண்டு, 2038
ஸர்வஜித், ஆனி 21

படிக்கப்பட்டது:-

1. அரசு கடிதம் எண்.3104/சிந.2/2007–1,நாள்.3.4.2007.
2. அரசாணை (ப) எண்.92, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள்.30.5.07.
3. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண். .டி2/3084/2007, நாள்.13.4.07.

* * * *

**ஆணை:**

2007-08 –ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தை சட்டமன்றத்தில் முன்வைத்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பை வெளியிட்டார்கள்.

> **“ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெறும் 10 பிற்படுத்தப்பட்ட / மிகப்பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த திறன் மிக்க மாணவ / மாணவிகளை தலை சிறந்த பள்ளிகளில் +1 பயில வாய்ப்பளிக்கும் திட்டம் ( ஆதி திராவிடர் நலத் துறை செயல்படுத்தியது போன்றே)” நடப்பாண்டில் செயல்படுத்தப்படும்.**

2. பார்வை 3–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர், “பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ / மாணவிகளின் கல்வித் தரத்தை உயர்த்துதல்” என்ற புதிய திட்டத்தில் 2007–2008 ஆம் ஆண்டு முதல் பொதுத் தேர்வில் அதிகம் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ / மாணவிகளை தலை சிறந்த பள்ளிகளில் சேர்த்து

+1 பயில வாய்ப்பளிப்பதற்கு ஏதுவாக 300 மாணவ / மாணவிகளுக்கு, ஒரு மாவட்டத்திற்கு 10 மாணவ / மாணவிகள் வீதம் ( 6 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ / மாணவிகள் மற்றும் 4 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவிகளுக்கு) ரூ.1,20,00,000/– (ரூபாய். ஒரு கோடியே இருபது இலட்சம் மட்டும்) செலவினத்தில் இத்திட்டத்தை செயற்படுத்திட பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் பரிந்துரைத்துள்ளார்.

3. இம் மாணவ / மாணவியர்களின் பட்டியலை மாவட்ட ஆட்சியர் மூலம் பெற்று இம்மாணவ / மாணவியர்களை தமிழ்நாட்டிலுள்ள தனியார்/ மத்திய மாநில அரசு நடத்தும் தலை சிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் / மேல்நிலைப்பள்ளிகளில் +1 பயில அரசு செலவில் ஏற்பாடு செய்யலாமென்று;ம், இத்திட்டத்தில் பயன் பெற மாணவ / மாணவியரின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மிகாமல் இருக்க வேண்டுமென நிர்ணயிக்கலாம் என்றும், இத்திட்டச் செயலாக்கம் குறித்து தொலைகாட்சி, வானொலி மற்றும் செய்தித்தாள்கள் மற்றும் மாவட்ட ஆட்சியரின் செய்திக் குறிப்பு ஆகியன மூலம் பொது மக்களும், மாணவர்களும் அறியும் வண்ணம் தேர்வு முடிவு வெளியிடுவதற்கு முன் விளம்பரம் செய்யலாமெனவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் பரிந்துரைத்திருந்தார்.

4. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை இயக்குநரின் கருத்துருவை ஆய்வு செய்த அரசு அதனை ஏற்று, அரசு பள்ளிகளில் பயின்று பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் ஒவ்வொரு ஆண்டும் அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ / மாணவியர்களில் மாவட்டத்திற்கு 10 மாணவ / மாணவிகள் வீதம் மொத்தம் 300 மாணவ / மாணவிகளுக்கு அவர்கள் தலைசிறந்த தனியார் பள்ளிகளில் சேர்ந்து +1 மற்றும் +2 பயில ஏதுவாக ஒரு வருடத்திற்கு, ஒரு மாணவருக்கு ரூ.28,000/–க்கு மிகாமல் இரண்டாண்டுகளுக்கு ரூ.56,000/– கீழ்கண்டவாறு செலவினம் மேற்கொள்ள அனுமதியளித்து ஆணையிடப்படுகின்றது:-

| | |
|---|---|
| கல்விக் கட்டணம் | ரூ.8,000/– |
| பராமரிப்புக் கட்டணம் | ரூ.3,650/– |
| விடுதிக் கட்டணம் | ரூ.15,000/– |
| சிறப்புப் பயிற்சிக் கட்டணம் | ரூ.1,500/– |
| **மொத்தம்** | **ரூ.28,150/–<br>(அல்லது) ரூ.28,000/–<br>ஓர் ஆண்டிற்கு** |

5. மேலே பத்தி 4–ல் கண்டுள்ளவாறு ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்வு செய்யப்படும் 10 மாணவ / மாணவியர்களில் 6 மாணவ / மாணவிகள் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்தவர்களாகவும் 4 மாணவ / மாணவியர் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவர்களாகவும் இருப்பர்.

6. மேலே பத்தி 4–ல் அனுமதித்துள்ளபடி 2007–08 ஆம் ஆண்டிற்கான செலவினமாக ரூ.84,00,000/–(ரூபாய் எண்பத்தி நான்கு இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்படுகிறது. 2006–07 ஆம் கல்வி ஆண்டிற்கான பத்தாம் வகுப்பு தேர்வு முடிவகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டு அம்மாணவர்கள் நடப்பாண்டில் பதினொன்றாம் வகுப்பில் சேர்க்கப்பட்டிருப்பார்களாதலால், அம்மாணவர்கள் பள்ளிக்கு செலுத்திய தொகையை, இவ்வாணையில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு மிகாமல் அவர்களுக்கு அப்பள்ளிகள் மூலமாக திரும்ப அளிக்கலாம்.

7. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மேற்படாமல் இருக்க வேண்டும் என்றும், இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்து தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் செய்திக் குறிப்பு மூலம் விளம்பரம் செய்வதற்கு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்தும் அரசு, ஆணை வழங்குகிறது.

8. மேலே ஒப்பளிக்கப்படும் தொகை கீழ் காணும் கணக்கு தலைப்புகளில் பற்று வைக்கப்படும்.

<u>பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்:</u> **ரூ.50.40 இலட்சம்**

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 –கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KW – திறன்மிக்க பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் மாணவர்கள் சிறந்த பள்ளிகளில் படிப்பதற்கான நிதியுதவி – 09 உதவி மானியங்கள் 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்.
(த.தொ.கு.2225 – 03 – 277 – KW – 0932)

**<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் :</u> ரூ.33.60 இலட்சம்**

**2225** – ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் **– 03** – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் **– 277** –கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KX – திறன்மிக்க மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்கள் சிறந்த பள்ளிகளில் படிப்பதற்கான நிதியுதவி – 09 – உதவி மானியங்கள் **– 03** – குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்.
(த.தொ.கு.2225 – 03 – 277 – KX – 0930)

இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.42936/பி,மிபி/07,நாள்..5.7.07–ன் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**என். வாசுதேவன்,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்

இயக்குநர்,
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ,
சென்னை –5.
இயக்குநர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை,
சென்னை –5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
தனித் துணை ஆட்சியர்(க.சீ)மதுரை–20
மாநில கணக்காயர், சென்னை –18/(பெயரில்)
மாநிலக் கணக்காயர்,(துணிக்கை–I),
சென்னை –18 / (பெயரில்)
மாநிலக் கணக்காயர்,(துணிக்கை–II)
சென்னை .6
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,
சென்னை –5/35/9/79.

சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
அனைத்து மாவட்ட கருவூல அலுவலகங்கள்

<u>நகல் :</u>

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை –9
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்
நிதி (பி, மி.பி) / (பிஜி.2) துறை,
இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்